போர்வாள்

"அந்நிய மூலதனமே வருக! வருக!"

அந்நிய மூலதனம் இந்தியாவுக்குள் நுழைவதை இந்திய சர்க்கார் எந்த விதத்திலும் தடுக்கப்போவதில்லை என்று பண்டிதநேரு அறிவித்திருக்கிருர். இந்திய வளத்தை உள்நாட்டு முதலாளிகள் சுரண்டுவது போதாதென்று வெளிநாட்டு முதலாளிகளையும் சுரண்ட அழைப்பது நியாயந்தானா? காங்கிரஸ் பக்தர்களே, பதில் கூறுங்கள்.

வாள் 2
வீச்சு 33

ஆசிரியர்கள்:
காஞ்சி, மணிமொழியார்,
மா. இளஞ்செழியன், B.A. Hons.

அ 1/2

Best copy avai

காந்தியார் இருந்தால்........!

கண்ணீர் சிந்துவார்!

உத்தமர் காந்தியார் வாழ்க்கையில் ஒரு சிறு நிகழ்ச்சி!

1926! சபர்மதியில் 'சத்தியாக்கிரக ஆஸ்ரமம்' அமைத்துக் கொண்டு அதில், அமைதியான சூழ்நிலைக்கிடையே, தேசபந்து ஆண்ட்ரூஸ் அவர்களின் துணையுடன், இருந்துவருகிறார் காந்தியார்.

ஒருநாள், தென்னாட்டிலிருந்து, காங்கிரஸ் வாலிபர் ஒருவர் காந்தியாரைக்காண வருகிறார். வாலிபர் ஒரு சிறந்த காங்கிரஸ் தொண்டர். ஏதோ ஒரு ஜில்லாவின் காங்கிரஸ் கமிட்டி செயலாளர். நாட்டின்மீது அவருக்கிருந்த தளராத பற்று காரணமாகவும் உரிமைப் போர் புரிவதில் அவருக்கேற்பட்ட வேட்கை காரணமாகவும் உயர்நிலைப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றிவந்த அவர், அந்தப் பதவியை உதறியெறிந்துவிட்டு, காங்கிரஸ் துவக்கிய உரிமைப் போராட்டங்களில் ஈடுபட்டுவிட்டார். பல ஆண்டு ஜில்லா காங்கிரஸ் செயலாளராக இருந்தார். அப்படி இருந்தபோது அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்ட ஏராளமான நிதியை காங்கிரசின் வளர்ச்சிக்காக, கொஞ்சம் தாராளமாகவே செலவிட்டிருக்கிறார். அவரைப் பொறுத்தவரையில் அந்தப் பணத்தில் சொந்தத்திற்கு ஒரு பைசாவும் எடுத்துக் கொண்டவர் அல்லர். அவரால் அவருடைய வட்டாரத்தில் காங்கிரஸ் கட்சிக்கு அபாரமான செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது. அருமையாக உழைத்திருக்கிறார். ஆனால் ஒரே ஒரு தவறு செய்திருக்கிறார். காங்கிரஸ் ஆக்க வேலைகளுக்காக என்று பல்வேறு துறைகளில் பணத்தைச் செலவிட்டிருக்கிறாரே, அதற்கு அவர் ஒழுங்கான கணக்கு விவரங்களை எழுதி வைத்திருக்கவில்லை. அதோடு காங்கிரஸ் வேலைகளுக்காக அவர், பலருக்கு, பல சமயங்களில் கொடுத்திருக்கும் பணத்திற்கு அவர்களிடமிருந்து ரசீதும் பெற்றிருக்கவில்லை. இதன் விளைவாக கிட்டத்தட்ட ஓராயிரம் ரூபாய் கணக்கில் துண்டுவிழுந்தது. காங்கிரஸ் கமிட்டி இந்த நிலைமையைக் கண்டதும் ஒன்று, அவர் அந்த ஆயிரத்திற்கும் கணக்குத் தர வேண்டும் அல்லது தன் சொந்தப் பணத்திலிருந்து ஆயிரம் ரூபாயை கமிட்டிக்குத் தர வேண்டும் என்று 'தீர்ப்பு' வழங்கிவிட்டது. ஆசிரியர் வேலையை உதறி எறிந்ததோடல்லாமல், தன் வாழ்நாள் முழுவதும் காங்கிரசின் வளர்ச்சிக்காகவே ஓயாது உழைத்து உழைத்து ஓட்டாண்டியாகி உள்ள தன்னைப் பார்த்து, கமிட்டி, இதுபோலக் கூறியதும், தொண்டர் உள்ளம் ஆத்திரத்தால் குமுறியது. கண்கள் நீரைப் பொழிந்தன. பொதுவாழ்வில் ஈடுபட்டு, சொந்த வாழ்வு உலர்ந்த சருகாக ஆனாலும் பரவாயில்லை, நாடு விடுதலை பெற்றால் போதும் என்ற எண்ணத்தோடு அரும்பணியாற்றி வந்த தோழருக்கு இந்த திடீர் நிலைமை இடிவிழுந்ததுபோன்ற அதிர்ச்சியை அளித்தது. செய்வதறியாது திகைத்தார் தோழர். கணப்கு வைக்கவில்லை, மெய்தான்! கணக்கு வைக்காதது தவறுதான்! ஆனால். ரூபா ஆயிரம்! எங்குப் போவார் அவர்! ஏது அவரிடம் ஆயிரம்! இருந்த சொத்து அவ்வளவும்தான் காங்கிரஸ் பணியாற்றிய காலத்தில் கரைந்துபோய் விட்டதே! இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து தப்புவது எப்படி என்றே தொண்டருக்குப் புரியவில்லை—தத்தளித்துக் தேம்பி நின்றார் தோழர்! திடீரென்று அவருக்கு ஒரு யோசனை பிறந்தது—உத்தமர் காந்தியாரிடம் சென்று இந்த சங்கடமான நிலைமையிலிருந்து விடுதலை அளிக்கும்படிக் கேட்டால் என்ன? அதுதான் சரியான வழி என்று எண்ணினார், ரயிலேறி சபர்மதிக்கு வந்தார், காந்தியாரைக் கண்டு வணக்கம் செலுத்தி வழக்கை உரைத்தார்.

ஆண்ட்ரூஸ் ஒரு பக்கம் அமர்ந்து கொண்டிருக்கிறார். காந்தியார் கட்டில்மீது வீற்றிருக்கிறார். தொண்டர், துக்கம் தொண்டையை அடைக்க, விழிகளில் வேதனை நீராக வழிய, உடைந்த உள்ளம் துக்கம் தோய்ந்த முகத்தில் அப்படியே நிழலாட, துண்டு துண்டாக உடைந்த வார்த்தைகளால், மெதுவாக, பரிதாபகரமான குரலில் தன் கதையைக் கூறுகிறார், முழு வரலாற்றையும் கூர்மையாகக் கேட்டு உணர்கிறார் காந்தியார், இடை இடையே பல ஐயவினாக்களைத் தூவி தூவி, அவற்றிற்குக் கிடைக்கும் விடைகளிலிருந்து, தொண்டர் கூறுவது அவ்வளவும் உண்மை என்பதையும், கணக்கில் வராத ரூபா ஆயிரமும் பொதுப்பணிக்கே செலவிடப்பட்டிருக்கிறது என்பதையும், அதில் ஒரு சிறு சல்லியும் தொண்டரால் தன் சொந்த வாழ்க்கைக்கு என்று எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதையும் தெளிவாகத் தெரிந்து கொள்கிறார் காந்தியடிகளார். தொண்டர் செய்த ஒரு குற்றம், ஒரே ஒரு குற்றம், கணக்கு வைக்காததுதான்—இது காந்தியாருக்கு நன்றாகத் தெரிகிறது.

"நீங்கள் சொல்வது அவ்வளவும் உண்மை என்பதை ஒப்புக்கொள்கிறேன். நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?"—காந்தியார் கேட்டார்.

"பாபுஜி, தங்கள் அன்புக்கு வந்தனம். நான் ஆயிரம் ரூபாய் தர வேண்டும் என்று வற்புறுத்த வேண்டாம் என்பதாக எங்கள் ஜில்லா கமிட்டிக்கு ஒரு கடிதம் எழுதுவீர்களானால் அதுவே போதும். கருணை புரியுங்கள்"—தொண்டர் கூறினார்.

ஆண்ட்ரூஸ் மனம் உருகிவிட்டார். உடனே அத் தொண்டர் கூறுவதுபோல கடிதம் எழுதுவதுதான் அத் தொண்டருக்குக் காந்தியார் செய்யக்கூடிய குறைந்தபட்ச உதவி என்று ஆண்ட்ரூஸ் எண்ணுகிறார். காந்தியார் என்ன சொல்லப் போகிறாரோ என்று ஆவலுடன் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். காந்தியார் தொண்டரை நோக்கிப் பேச ஆரம்பித்தார்.

"கடிதம் எழுதவேண்டுமா? நானா? ஒரு நாளும் முடியாது! நீங்கள் செய்திருப்பது மன்னிக்க முடியாத குற்றம் என்பதே என் கருத்து. பொதுப் பணத்தில் உள்ள ஒவ்வொரு தம்பிடியும் ஒரு தெய்வீக சொத்து. அதை எவ்வளவு ஜாக்கிரதையாக வைத்திருந்தாலும் தகும். நீங்கள் அந்த ஆயிரம் ரூபாயில் ஒரு தம்பிடியையும்

உங்கள் சொந்தத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நான் நன்றாக உணர்கிறேன். ஆனால் கணக்கு இல்லையே! என்னைப் பொறுத்தவரை கணக்கில் வராத ஒவ்வொரு தம்பிடியையும் தவறாகக் கையாளப்பட்ட பணமாகவே தான் கருதுவேன். எனவே கமிட்டி உங்களிடமிருந்து பணத்தைக் கோருவது மிகமிக நியாயமே. உங்களிடம் பணம் இல்லாவிட்டாலும் ஏதாவது நிலம் அல்லது சொத்து இருந்தால் அதனை விற்றாவது ஆயிரம் ரூபாயை கமிட்டிக்குத் தந்துவிடுவதுதான் நியாயம்."

காந்தியார் பேசி முடித்தார். தனக்கு நியாயம் வழங்க காந்தியார் ஒருவர்தான் இருக்கிறார் என்று ஆவலோடு ஓடி வந்த தொண்டர் இந்தக் கடுமையான உரையை காந்தியடிகள் வழங்கக் கண்டதும் நடுநடுங்கிவிட்டார். தொண்டரின் இதயம் தூள்தூளாக உடைந்து கீழே சிந்துவதுபோல் ஆகிவிட்டது. குழந்தை போல விம்மி விம்மி அழத்தொடங்கினார் நண்பர். அவருக்கு உலகமே தலைகீழாகச் சுற்றுவதுபோல் தென்பட்டது. பாபுஜியா இப்படிக் கூறுகிறார் என்பதை அவரால் நம்பவே முடியவில்லை.

அருகில் இருந்த ஆண்ட்ரூஸ் தொண்டரையும் தொண்டர் நிலைமையையும் கண்டார். கண்டதும் அவர் மனம் அனலிடு மெழுகென உருகலாயிற்று. பொதுவாழ்வில் ஈடுபட்டு தியாகத் தீயில் தன்னை அர்ப்பணித்துவிட்ட ஒரு பொது நலத் தொண்டனிடம் நடந்துகொள்ள வேண்டிய முறை இது அல்ல என்று, ஆண்ட்ரூஸ், காந்தியாரிடம் வாதாடத் தொடங்கினார். உங்கட்கு இரககம் இல்லையா என்று கெட்டார். தொண்டரிடம் பணம் ஏது கொடுப்பதற்கு என்று வினவினார். இது நியாயமல்ல என்று காரமாகப் பேசினார். 'மன்னிப்புக் கேட்கும்' இளைஞனிடம் கொஞ்சம் அன்போடு நடந்துகொள்ள வேண்டாமா என்று இறுதியில் கொஞ்சம் கோபமாகக் கேட்டார்.

(அடுத்த இதழில் முடியும்)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வுப் பஞ்சம் தீருமாம்! ஆகவே கடவுளின் கருணையைக் கோரி நாம் விண்ணப்பம் போடவேண்டுமாம்! அற்புதமான தத்துவம்! அருளிவிட்டார் அமைச்சர்! ரொம்பச் சரி குமாரசாமியாரே, அப்படியே செய்கிறோம், ஆனால் இடையே ஒரே ஒரு ஐயம்! எங்கள் துயரத்தைக் களைவதற்கு ஆண்டவனால் தான் முடியும், அவரிடம்தான் நாங்கள் அதற்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும் என்கிறீரே நீர், இது உண்மையானால் நீர் எதற்காக இடையே முதலமைச்சராக இருக்கவேண்டும் — ராஜிநாமா செய்துவிடலாமே பதவியை! எப்போது செய்வதாக உத்தேசம்? செய்வதை சீக்கிரமாகச் செய்துவிடுங்கள்! டாக்டர் சுப்பராயனோ அல்லது கனம் பக்தவச்சலமோ யாருக்கு "பிராப்தம்" இருக்கிறதோ அவர் பிரதமராகிவிடுவார்!! அவர்கள் ஆசையும் தீர்ந்து போகட்டும் பாவம்! உங்களிடம் மக்கள் ஒப்படைத்த வேலையைத் தான் நீங்கள் ஆண்டவனிடம் ஒப்படைத்துவிட்டீர்களே, இன்னமும் ஏன் நீங்கள் வீணாக பிரதமர் பதவி என்ற பாரத்தைக் சுமக்க முடியாமல் சுமந்துகொண்டிருக்கவேண்டும்? ஏன் வீண் கஷ்டம்! பதவியை உதறி எறிந்துவிடுங்கள்! பிறகு பாருங்கள் இந்தப் பொறுப்பு தொல்லை கஷ்டம் சங்கடம் எல்லாம் இருக்கின்றனவா என்று! சந்தேகம் இருந்தால் ஓமந்தூராரைக் கேட்டுப் பாருங்கள்—பதவி பறிபோன பிறகு சுகம் எவ்வளவு அதிகம் என்பதை அவர் அழகாக எடுத்துக் கூறுவார்! எம். எல். ஏக்கள் உங்களைப் பிரதம மந்திரியாக்கினார்கள், நீங்களோ ஆண்டவனையே பிரதம மந்திரியாக்கிவிட்டீர்கள்! எவ்வளவு அபாரமான திறமை! இவ்வளவு திறமை வாய்ந்த உங்களைப் பார்த்து திறமை அற்றவர் என்று துணிச்சலாக எழுதி இருக்கின்றனரே ஹிந்து மித்திரன் பாரததேவி அண்டு கம்பெனியார்! என்ன தைரியம்! திறமைசாலி என்றால் திறமைசாலி நீங்களேதான்! சந்தேகமே இல்லை! உங்கள் கஷ்டங்கள் தீரவேண்டுமானால் கடவுளை நம்புங்கள் என்று தங்களைத் தவிர வேறு எந்த முதலமைச்சரால் மக்களைப் பார்த்து இவ்வளவு அழுத்தந் திருத்தமாகக் கூறமுடியும்!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை எண்ணுவோம், எனவே எத்தகைய கோரமான தடியடியையும் தாங்கும் உள்ள உரம் எங்கட்குத் தானாகவே ஏற்படும்! தடி முறிந்து வீழ்ந்தாலும் வீழுமேயன்றி எங்கள் உள்ளம்— அது ஒருபோதும் முறிந்து வீழாது! ஆளவந்தார்கள் இந்த அரிய உண்மையை உணர்ந்துகொள்ளட்டும்-உணரும் சக்தியிருந்தால்!"

[கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே கோரமான தடியடி ஆரம்பமாகிறது. தமிழர்கள் குருதி சிந்துகின்றனர். பல்லாயிரவர் கரங்கள் முறிந்து வீழ்கின்றன. பலர் மண்ணில் சாய்கின்றனர். தாலமுத்தே நடராசா வேலாயுதா என்ற குரல் ஒலி விண்ணை முட்டிக்கொண்டு எழுகிறது. எங்கும், எங்கெங்கும், மண் எங்கும், விண் எங்கும் அதே ஒலி! அந்த ஒலி முன் தடியொலியும் சிற்றொலியாகிவிடுகிறது]

* * *

தாலமுத்தே! நடராசா! வேலாயுதா! உரக்கக் கூவினேன் நான்! மறுபடியும் மறுபடியும் கூவினேன்! என் தாய் பதறி ஓடிவந்து "என்னடா கண்ணு! ஏண்டா கூச்ச போடறே! பொழுதே விடிஞ்சி போச்சே! எழுந்திரு! போய் மூஞ்சைக் கழுவு!" என்று பரபரப்புடன் கூறினார்கள், அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது இவ்வளவு நேரம் நான் கண்டது அவ்வளவும் கனவு என்பது!

நிகழ்ச்சிக் குறிப்புகள்

செவ்வாய்ப்பேட்டை, சேலம்: 17-4-49 ஞாயிறு மாலை. திராவிடர் கழக ஆண்டுவிழா. பேச்சாளர்கள்: ஏ. பி. ஜனார்த்தனம். எம். ஏ., மா. இளஞ்செழியன் B. A. Hons.

சைதாப்பேட்டை, சென்னை: 18-4-49 திங்கள் மாலை. மாணவர் மன்றம் ஆண்டுவிழா. தலைவர்: மா. இளஞ்செழியன் B. A Hons. பேச்சாளர்கள்: இரா. நெடுஞ்செழியன் M A, ஈ. வி. கே. சம்பத்.

கற்பனை ஓவியம் :

மஞ்ஜரி

[சீதா]

"வாழ்க்கை என்னும் பூஞ்சோலையில், மிக உல்லாசமாக விளையாடி, பூங்காவிலே சொரியும் தேனை, துளி துளியாக ருசிபார்க்க வேண்டுமெனத் திட்டம் தீட்டியிருந்தேன்; ஆனால், என் திட்டம் இதுபோலத் தூள் தூளாகச் சிதறுண்டு போகும் என்று யான் கனவிலும் எண்ணியதில்லை. எல்லையில்லாத் தொல்லையை அனுபவிக்க வேண்டுமென்பது தானா என் வாழ்வின் அடிப்படை? இது தானா தமிழகத்தில் வாழும் ஒரு தமிழச்சி பெறக்கூடிய பேறு! வாழ்விலே வெற்றிபெற்று இன்பபுரிப் பயணம் புரியவேண்டுமென இவ் வஞ்சக உலகில் இன்பக் கனவுகள் கண்டதன் பயனா இது? ஏழையாகப் பிறந்த காரணத்தால் துன்பத்தை அனுபவித்துத்தான் தீரவேண்டும் என எந்த சாஸ்திரம் சாற்றுகிறது?

மணமாகாததற்கு முன் எவ்வளவோ ஆசைக் கோட்டைகளையெல்லாம் கட்டியிருந்தேனே! இளமையும் எழிலும்வாய்ந்த கணவன்; ஒன்றுபட்ட மனம்; ஓயாத இன்பம்; எப்பொழுதும் இன்பபுரிக்கு அழைத்துச் சென்று அங்கே என்னை இன்பத்தில் ஆழ்த்தும் இளவாலிபன்; என்றென்றைக்கும் மாறாத இன்பம்; இனிய பேச்சு; அவர் அலுவலகத்தில் இருந்து திரும்பும்போது, இன்முகத்தோடு அவரை வரவேற்று,......... ஐய்யய்யோ! பாழும் மனமே!! இன்னுமா அந்த நினைப்பு? நான்தான் ஒரு கிழவனுக்கு உரிமையாகி விட்டேனே!........."

"அம்மா, தங்கட்கு சூடிக் கொள்ளக் கதம்பம்!"—சிந்தனை எனும் தேர் ஏறி துக்கபுரியில் உலவிக் கொண்டிருந்த இளமங்கையின் உள்ளம் இச் சொற்களைக் கேட்டதும் தன் பயணத்தை நிறுத்திற்று. மங்கை கதவைத் திறந்தாள். வெளியிலே, ஓர் கட்டிளங்காளை கையில் கதம்பத்துடன் புன்னகை தவழக் காட்சியளித்தான்; கண்டாள் காரிகை; உள்ளத்திலே ஓர் உணர்ச்சி; எல்லையில்லா மகிழ்ச்சி! மௌனத்தால் தலை குனிந்தாள். நஞ்சினை ஊட்டும், வஞ்சக உலகில் சஞ்சரிக்கும் கிழவனிடத்தில் பஞ்சணையில் இன்பம் காணுவதைவிட இவ்விள வாலிபனிடத்தில் தஞ்சம் புகுந்தால்தான் என்ன என்றுகூட எண்ணி விட்டாள். அப்படி எண்ணுவது தன்னைத் தொட்டுத் தாலி கட்டிய தன் வயோதிக்க கணவனுக்குத்தான் செய்யும் தவறு, துரோகம் என்பதெல்லாம் அவளுக்குப் புரியத்தான் செய்தது. ஆனால் அவளுடைய இளமையின் துடிப்பு அவளுடைய வாதங்களை விட பலம் வாய்ந்ததாக இருந்தது! என் செய்வாள் அவள்! அவள் தன்னை அறியாமலே பேசத் தொடங்கினாள்.

"நீ யாரப்பா? எங்கிருந்து வருகின்றாய்?"

"அம்மா! நான் தங்களின் தோட்டக்காரன்"

"தோட்டக்காரனா!"

"ஆம், அம்மா!"

"இத்தனை நாட்களாக எனக்குக் கதம்பம் கொடுத்தனுப்பினது யார்?"

"நான் தான் அம்மா: என் பாட்டியிடம் முதலியார் உத்திரவிட்டபடி தினமும் தங்கட்கு கதம்பம் அனுப்பி வருகிறேன்!',

"இன்று நீ இங்கு வரக்காரணம்?"

"என் பாட்டிக்கு உடல் நிலை சரியில்லை அதனால் நானே இங்கு வர நேரிட்டது"

"உனக்குத் தாய் தகப்பன்மார் இருக்கின்றனரா? எங்கே இருக்கின்றனர்? என்ன செய்கின்றனர்?"

"அம்மா சொல்கின்றேன்; என் தகப்பனார் வீரப்பன்; வேளாள வகுப்பைச் சேர்ந்தவர்கள் நாங்கள்; சிறு வயதிலேயே என் தாயை இழந்தேன். தகப்பனார் சம்பாதித்து வைத்த ஊதியத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் என்னை 5-வது வகுப்பு வரையில் படிக்கவைத்தார்; இன்னும் சிறிது கல்வி பயிலலாம் என எண்ணம்தான்; ஆனால், செல்வம் என்னும் துணைவன் கூட இருக்க மறுத்து விட்டான்; ஆகலின் என் பள்ளி வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்தாய் விட்டது! கையில் உள்ள பொருள் எல்லாம் தீர்ந்துவிடவே என் தகப்பனார் தங்கள் கணவராகிய முதலியாரிடத்தில் கொஞ்சம் பொருள் வாங்கினார் கடனாக; தங்கள் கணவரிடம் வாங்கிய சிறு கடனுக்காக என் தந்தை தன் ஆயுள் உள்ள அளவும் தங்கள் கணவருக்கு உழைக்கவேண்டும் என்று பத்திரமும் எழுதப்பட்டது. அதன்படியே கடன் வாங்கிய பிறகு சிறிது காலம் என் தந்தை வேலை செய்தார், பிறகு மாரடைப்பினால், இறந்து போனார்; அவர் இறந்ததில் இருந்து நான்தான் அவ் வேலைகளைக் கவனித்து வருகின்றேன்."

"உனக்கு மணம் ஆகிவிட்டதா?"

"எனக்கா! மணமா! ஆவதா! இல்லையம்மா இல்லை! உலகில் பணமின்றி நடைப்பிணமாகத்திரியும் இந்த ஏழை வாலிபனுக்கு மணம் எப்படி யம்மா நடக்கும்? என் தந்தையார் இறந்த நாள் முதல் வாழ்க்கையில் . இன்பம் என்பது இன்னது என்றே அறியாமல் வறுமைத் தீயிலே வெந்து கருகும் எனக்கு எப்படியம்மா மணம் நடைபெறமுடியும்? யாரம்மா என்னை மணம் செய்து கொள்ள முன்வருவார்கள்? எனக்கு!மணம்! நடக்கும் கதையாமா அது! பூத்துக் குலுங்கும் தங்களின் பூங்காவிலே ரீங்காரம் செய்யும் வண்டுகள் தேனை மொண்டு உண்டு செல்வதையும், குயில் கூவுவதையும், கோலம் மிகுந்த மயில் ஆடுவதையும், அதன் அழகிய ஆடல் கண்ணாடி போன்ற நீர் ஊற்றுகளில் நிழலாடும் காட்சியையும், மணம் வீசித்திகழும் மந்தமாருதத் தென்றலையும், தென்றலின் தனிப்பெரும் உதவியால் அசைந்து அசைந்து நாட்டியமாடும் பூச்செடிகளின் வனப்பையும், தோட்டத்தில் காய்த்துக்கிடக்கும் வாழைக்குலைகளையும், கொத்துக் கொத்தாய்ப் பூத்துக் குலுங்கும் மலர்களையும்; இன்ன பிற அழகுகளையும் நாள் தோறும் கண்டு கண்டு களிக்கிறேனே, அதுதானம்மா எனக்குத் திருமணம். அந்தத் தோட்டந்தானம்மா என் வாழ்க்கைத் துணைவி! அவளுடன்தானம்மா நான் நித்த

நித்தம் கொஞ்சி விளையாடுகிறேன்!......"

"இவ்வளவு அழகாகப் பேசுகிருயே! எங்கிருந்தப்பா நீ இந்த இனிய தமிழைக் கற்றுக் கொண்டாய்........"

"அந்த அழகிய தோட்டத்திலிருந்து தான்! அங்கே வீசும் தென்றல், ஆடிடும் செடிகொடி, பூத்துக் குலுங்கும் மலர்கள், கூவும் குயில்—இவைதான் என் ஆசிரியர்கள்!"

"கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியனுக இருக்க வேண்டியவனப்பா நீ! எப்படியோ இங்கே தோட்டக்காரனுக இருக்கிருய்?"

"என்ன செய்யலாம் அம்மா! எல்லாம் விதி விட்ட வழி!"

"விதி! விதி! விதியா இது! அல்ல! அல்ல! வாழத் தெரியாத மனித சமுதாயம் தனக்குத் தானே செய்துகொண்ட சதி!......"

"அம்மா! இதுபோல வெல்லாம் பேசாதீர்கள்! முதலியார் கேள்விப்பட்டால் கோபித்துக் கொள்வார்! ......கதம்பம் போதுமா, இன்னமும் கொண்டுவரட்டுமா அம்மா ......சீக்கிரம் கூறுங்கள், நாழியாகிறது நான் போகவேண்டும், தோட்டத்திற்கு நீர் பாய்ச்சவேண்டும், மிச்சமிருக்கும் பூக்களைப் பறிக்க வேண்டும், தேங்காய் அறுக்க வேண்டும், வேலை நிறைய இருக்கிறது......"

"உன் பெயர்......"

"வேலன்"

"சரி, போ!"

* * *

மனோகரி ஓர் எழில் மிக்க மங்கை, கட்டழகி! "யானைத்தந்தத்தால் செதுக்கியதுபோன்ற உருவம், முல்லையை நினைப்பூட்டும் பற்கள்; கார்மேகத்தைப் பழிக்கும் கூந்தல், வேல்விழி; அன்னநடை; அன்பு கனிந்த பார்வை; யாவரையும் தன் எழிலில் நொடியில் சிக்க வைக்கும் சிங்காரி" என்றெல்லாம் புலவர்கள் புகழ்மாலை சூட்டுவார்களே தங்கள் கதைகளில் வரும் கதாநாயகிகட்கு! அது மனோகரியைப் பொறுத்தவரை புகழ்மாலை அல்ல! உண்மை! எழிலரசியாக விளங்கினுள் அவள்! எனவேதான் எளிய குடும்பத்தில் பிறந்து வறுமையில் வாடும் வல்லியாக இருந்தும் அவளையே விரும்பினுர் இதற்கு முன்னரே இரு மனைவிகளை இழந்து தவிக்கும் மனமொடிந்து போன மாசிலாமணி முதலியார்! ரூ. 2000-க்கு அவளை மனைவியாக விலைபேசி வாங்கியும்விட்டார்!

வாழ்க்கையின் இன்பத்தைத் துய்க்காத வாடாத ஓர் மலர், மனோகரி. மனோகரி மனோகரமாகத் தான் காட்சியளிக்கின்ருள். ஆனல் அவள் வாழ்க்கை ஓர் பாலைவனம் தானே! அறுபது வயதுடைய கிழவனிடம் ஓர் இளமங்கை எவ்விதம் இன்பத்தைக் காணமுடியும்? இன்பக் கடலில் இன்னலின்றி நீந்த, இளவாலிபனை மணக்கலாம் எனஎண்ணியிருந்தாள் மனோகரி. ஆனல் இறுதியில் துன்பக் கடலிலே கொண்டு போய்ச் சேர்க்கும் தோணியிலே தான் ஏறினுள். அவள் இந்தத் தோணியிலே ஏறினது அவள் குற்றமல்ல. அவளுடைய பெற்றோர்களின் குற்றம்! பொருளாசை பிடித்த காரணத்தால், மனோகரியை மடுவில் கொண்டுபோய்த் தள்ளினுர்கள் அவர்கள்! அதற்கு இவ்வுலகமும் சம்மதித்தது. "பணம் பாதாளம் வரையில் பாயும்" அல்லவா!

மாசிலாமணி முதலியாருக்கு அழகிய தோட்டம் ஒன்று உண்டு. அதிலே காய்கறிகள் ஏராளம். அந்தத் தோட்டத்தைக் கவனிக்கத் தான் வேலன் இருக்கின்ருன். தோட்டத்தைத் தன் கண்ணின் மணிபோலக் காத்துவந்தான் வேலன். மலர் மாலை தொடுப்பதிலோ, வேலனுக்கு இணை வேலன்தான்! அன்றலர்ந்த மலர்களை அழகாக, அடுக்கடுக்காக, நிறவாரியாக அவன் வைத்துக் கட்டி எடுத்துக் கொடுக்கும்போது மலர்மாலை தொடுப்பதற்கென்றே பிறந்தவனப்பா வேலன் என்று எவரும் கூருமல் இரார்! அவ்வளவு அழகாக இருக்கும் அவன் தொடுக்கும் மாலைகள்! வேலன் தொடுக்கும் மாலைகளை அவன் பாட்டி மனோகரியிடம் சமர்ப்பித்து வருவாள் — இது வாடிக்கை! ஆனல் ஒரு நாள், பாட்டி வரமுடியவில்லை மனோகரியிடம். வேலனே வந்தான். வேலனை அதுவரை கண்டதில்லை வயோதிக முதலியாருக்கு வாழ்க்கைப்பட்ட மனோகரி! அன்றுதான் கண்டாள், பேசினுள், நெஞ்சத்தைப் பறிகொடுத்துவிட்டாள் வேலனிடம்!

* * *

முதலியார் வீட்டில், இரு கிழவிகள், பார்வதி, சுப்பம்மாள் என்ற பெயருடன் இருந்தார்கள். புரட்டாசிமாதம்; அந்த மாதத்தில்தான் வருகின்றது மாகாளி அமாவாசை! பாவத்தையெல்லாம் தொலைத்து, பரமனடி சேருவதற்குப் பரதவிக்கும் மக்கள் சீரங்கத்துறைக்குச் சென்று காவேரி ஆற்றிலே முழுகி எழுதல்-வேண்டுமாம்! அதற்காக முதலியார் அந்த இரு கிழவிகளையும், அழைத்துச் சென்றுவிட்டார் சீரங்கத்துக்கு! வீட்டிற்குக் காவல் மனோகரிதான்; அந்நாளில்தான் வேலன் மனோகரியைச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது நடந்த நிகழ்ச்சிதான் மேலே தீட்டப்பட்டுள்ளது.

* * *

நதியிலே நீராடி, பாவத்தை இறக்குமதி செய்து, புண்ணியத்தை ஏற்று மோக்ஷ லோகம் போகவேண்டுமென முதலியாரும், இரு கிழவிகளும், ஆற்றிலே இறங்கி, "அய்யனே! மெய்யனே! துய்யனே! சீரங்கநாதா! மச்ச கூர்மவதாரா! மணிமகுடம் தரித்தவா! அகிலாண்டகோடி, பிரமாண்ட நாயகா! அநாதை ரட்சகா! ஆபத்பாந்தவா! பக்த கோடிகளை காக்கும் பரந்தாமா! நாங்கள் செய்யும் பாவங்களையெல்லாம் நீ ஏற்றுக் கொண்டு, எங்களை மோட்ச லோகத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்!" என கண்களை மூடி ஜெபித்தனர், சிறிது நேரம் செல்ல, காவேரிநீர், மழை வெள்ளத்தால் பெருக்கெடுக்கவே, பார்வதி என்ற கிழவி சற்று தள்ளி ஆழத்தில் நின்றதால், அக் கிழவியை ஆறு இழுத்துச் சென்றது.

உடனே, "ஐயய்யோ! ஒரு கிழவி ஆற்ருேடு செல்கின்ருள்! அவளைக் காப்பாற்றுங்கள். உங்களுக்குப் புண்ணியம் உண்டு" என்று, புண்ணியம் பெற வந்திருக்கும், "புண்ணியாத்மாக்கள்" அனைவரும் சத்தம் போட்டார்களே ஒழிய, ஒருபக்தனுவது ஆற்றிலே குதித்து, இழுத்துச்சென்ற கிழவியைக் கரைக்கு மீட்டுவர முன் வரவில்லை.

"பார் புகழும்" அரங்கநாதராவது பக்தர்களின் இரைச்சல் கேட்டு எழுந்து வந்திருக்கலாம்; என்ன காரணத்தினலோ அவரும் அயர்ந்து தூங்கிவிட்டார்! பரமனருள் பெற வந்த இடத்தில் இந்த இடர் ஏற்படலாமா? அதுவும் நடு ஆற்றில் அரி அவர்தம் பக்தர்களைக் கைவிடலாமா? இது தானு பக்தி

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 சித்திரை 4
16—4—49 சனிக்கிழமை

கடவுளை நம்புங்கள்!
கஷ்டங்கள் தீரும்!

"வயிறார உண்ண உணவில்லையா? பசி பசி என்று கதறுகிறீர்களா? பட்டினி பட்டினி என்று கூவுகிறீர்களா? விளைச்சல் போதவில்லையா? வயல்கள் சாவியாகி விட்டனவா? மழை துளியும் இல்லையா? அப்படியானால் கடவுளை நம்புங்கள்! கஷ்டங்கள் தீரும்!"

இந்த திருவாய் மொழியினைத் திரு அருள் புரிந்த திவ்விய புருஷர் தருமபுர ஆதீனத்துத் தம்பிரான் சுவாமிகள் அல்ல, திருவாவடுதுறையில் வீற்று திருஅரன் அருளைத் தேடி பக்தகோடிகளைப் பரவசமுறச் செய்திடும் புண்ணிய காரியம் புரிந்திடும் ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நிதிகள், அல்ல! காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்யா ஸ்வாமிகளும் அல்ல! குளத்தங்கரையில் அமர்ந்து கொண்டு பஞ்சாங்கக் கட்டைக் கையில் ஏந்திக்கொண்டு உலர்ந்த புல் ஆயுதத்தை ஒரு கையில் வைத்துக்கொண்டு வேதாகமங்களின் உட்பொருளையும் உபநிஷத்துகளின் கருப்பொருளையும் விரித்துரைக்கும் பிரம்மஸ்ரீ குப்பண்ணய்யங்கார் அண்டு அப்பண்ணய்யங்கார் கம்பெனியைச் சேர்ந்த யாரோ ஒருவரும் அல்ல! உண்மையாகவே கூறுகிறோம், இந்த உயர்ந்த உண்மையை உலகெலாம் வாழவேண்டும் என்ற உந்நத நோக்கத்தோடு ஊருக்கெல்லாம் எடுத்துரைத்துள்ள உத்தமப் பணியினைப் புரிந்துள்ளவர் ஓர் அமைச்சர்! அதுவும் இந்த நாட்டு அமைச்சர்! அதிலும் முதலமைச்சர்! அதுவும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலமைச்சர்! —ஸ்ரீமான் குமாரசாமி ராஜா!

ஆம்! புதிய பிரதமர் குமாரசாமியார்தான் இந்தப் பொன்னான வாசகத்தைப் பொதுமக்கட்குத் தந்திருக்கிறார் புத்தாண்டுச் சேதியாக சித்திரை முதல் தேதியன்று! இந்த ராஜபாளையத்து "ராஜா" இந்த நாட்டு முதலமைச்சராக ஆன பிறகு முதன்முதலாக வெளியிடும் முக்கியமான அறிக்கை—தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து! அந்த முக்கியமான அறிக்கையிலேதான் இந்த முத்துப் போன்ற மொழிகள் முத்து முத்தாகக் காணப்படுகின்றன!

"கடவுளை நம்புங்கள்! உணவுக் கஷ்டங்கள் தீரும்!"—கூறுகிறார் குமாரசாமியார் தைரியமாக இந்த வாசகத்தை இப்படிக் கூறுவதற்கு ஒரு முதலமைச்சர் தேவையில்லையே என்ற முன்யோசனை சிறிதுமின்றி! இந்த அருள் மொழியைத் தந்தருள்வதற்கு ஒரு முதலமைச்சரா தேவை! வீதிக்கு வீதி பல வீணர்கள் இந்த வெட்டி வாசகத்தைத்தானே விவேக சிந்தாமணி என்றெண்ணிக்கொண்டு வீசிய வண்ணம் உள்ளனர்—இதே காரியத்தைத்தான் குமாரசாமியாரும் செய்யமுடியும் என்றால் இதற்கு அவர் முதலமைச்சராக இருப்பானேன், மாதம் ஓராயிரத்தைந்நூறு ஊதியம் வேறு பெறுவானேன், காலணா காசை வீசினால் சாவடியோரத்திலோ சாலை மருங்கிலோ வீற்றிருக்கும் சாமா சாஸ்திரிகளோ அல்லது சம்பூர்ண குருக்களோ இதை இன்னமும் தெளிவாக எடுத்துரைத்திடுவரே! அப்பு குருக்களும் அப்பண்ணய்யங்கார்களும் அரையணா காசுக்காக அடுக்கடுக்காகக் கூறும் இந்த உபதேச காண்டத்தை மொழிவதற்குத்தானா இந்த இராஜபாளையத்து இராஜா உத்தமர் ஓமந்தூராரையும் வீழ்த்திவிட்டு ஓடோடிவந்தார் ஊராளும்பதவிக்கு!

நாட்டிலே உணவுப் பஞ்சம் என்றால், ஊர்வாழும் மக்களுக்கு உண்ண உணவில்லை என்றால், விளைச்சல் போதவில்லை—விபரீத நிலைமை நேரிட்டுவிட்டது என்றால், பசியும் பட்டினியும் பாமரரை வதைக்கத் தொடங்கிவிட்டது என்றால், அளவரிசி எட்டு அவுன்சு—அந்த அரிசி பெறவும் வழியில்லை மக்கட்கு என்றால், ஒரு நாட்டை ஆளும் முதலமைச்சர் நியாயமாகச் செய்யவேண்டிய காரியம் உணவுப் பிரச்சினையிலும் உழுதொழில் கலையிலும் வல்லாரை அழைத்து, உணவுப் பொருளைப் பெருக்குவதற்காக என்னென்ன வழிமுறைகளை மேற்கொள்ளலாம் என்பதை அவர்களுடன் அமர்ந்து ஆரத் தீர எண்ணிப்பார்த்து, ஏற்ற முறைகளை மேற்கொண்டு உணவுப் பொருளின் உற்பத்தியைப் பெருக்குவது! ஆனால் நமது முதலமைச்சரோ அந்த நல்வழியைக் கடைப்பிடித்தனரில்லை! கடவுளை நம்புங்கள் கஷ்டங்கள் தீரும் என்று பேசுகிறார்! அப்படிப் பேசிவிட்டால் போதும் ஆண்டவன் அந்தக்காலத்தில் பக்தர்கள் துயரைத் துடைக்க பூலோகத்திற்கு வந்து வந்து போனாரே அதுபோல வருவார்—நம் துக்கத்தைத் துடைப்பார்—உணவுப் பொருளைப் பெருக்குவார்—பஞ்சம் தீரும் என்ற எண்ணம் போலும் முதலமைச்சருக்கு! ஆனால் ஆண்டவனுக்கு இப்போதெல்லாம் அந்த லோகத்திலேயே அளவுக்கு மீறிய வேலை இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை அவர் இப்போதெல்லாம் இந்த லோகத்தை எட்டியும் பார்ப்பதில்லை—இந்த உண்மை முதலமைச்சருக்குத் தெரியாமலிருக்க நியாயமுமில்லை—தெரிந்ததுதான் இவ்வுண்மை என்றால், இராஜபாளையத்தார், ஏன் பிறகு அவ்வண்ணம் பேசினார்?

ஆண்டவனுக்கு என்ன தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சத்தைப் போக்குவது ஒன்றுதானா வேலை! ஆண்டவன் பரமசிவனாயிருந்தால் பக்கத்திலிருக்கும் பார்வதி தேவிக்கும் சடைமுடி மீதிருக்

கும் கங்காவுக்கும் ஏற்பட்ட வண்ணமிருக்கும் சக்களத்திச் சண்டையைத் தீர்த்தாகவேண்டும்! அவர் பன்னிருகையனாக இருந்தாலோ இப்புறம் இருக்கும் வள்ளியா அப்புறம் இருக்கும் தெய்வயானையா, யார் அழகில் சிறந்தவர்கள், என்ற "அழகுப்போட்டி"க்கு அரிய விடை கண்டு பிடித்தாக வேண்டும், அவர் அரிகிருஷ்ண பரமாத்மாவாக இருந்தாலோ ராதையுடன் சிரித்து மகிழும்போது சத்தியபாமா கதவைச் சாத்தி விடுவாள், உடனே,—"சாமி, சத்தியபாமா, கதவைத் திறவாய்" என்று பாடியாக வேண்டும், பாமா கதவைத் திறந்து கிருஷ்ணன் உள்ளே புகுந்துவிட்டாலோ ராதைக்குக் கோபம் கோபமாக வரும், அந்தக் கோபத்தைத் தணிப்பதற்காக "ராதே உனக்குக் கோபம் ஆகாதேடி" என்று மகுடி வாசிக்க வேண்டும், இருவருக்கும் இடையே ஏற்படும் இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கே அவருக்கு நேரம் இருக்காது. அவர் எப்படி மக்களுக்கு ஏற்படும் குறையைத் தீர்த்து வைக்க முடியும்? ஆண்டவன் பிரமச்சாரி விக்னேஸ்வரராக இருந்தாலோ, குளத்தோரத்தில் அமர்ந்து கொண்டு, அங்கு நீர் மொள்ள வந்து செல்லும் எழிலரசிகளுக்குள்ளே யார் தன் தாயைப் போல எழிலும் கற்பும் ஒருங்கே அமைந்தவள் என்பதைக் கண்டு பிடித்தாகவேண்டும்—கண்டுபிடித்தால்தான் அவருக்கு ஒரு வாழ்க்கைத்துணைவியார் கிடைப்பார்கள்! அல்லது அவர் திருமணமான விக்னேஸ்வரராக இருந்தாலோ அவருக்கு வல்லபை சல்லபை இருவர் மனைவியர்! மனைவியர் இருவர் ஆயின் அவருக்கு மனநிம்மதி எப்படி இருக்கமுடியும்—மக்கள் துயரைத்தான் அவர் எப்படிப் போக்கமுடியும்?

ஆகவேதான் அன்பர் குமாரசாமியார் கடவுளை நம்புங்கள்—கஷ்டங்கள் தீரும் என்று கருத்துரை புகன்றதைக் கண்டபோது, நமக்கு, "இது ஆகிற காரியமா? நடக்குமா இது? ஆண்டவன் தமக்குள்ள ஆயிரமாயிரம் அலுவல்களை விட்டுவிட்டு இந்த அற்ப காரியத்தைச் செய்யவா ஓடோடி வருவார்?" என்ற சந்தேகம் பிறந்தது. சந்தேகம் சஞ்சலத்தைத் தந்தது. சஞ்சலம் நமக்குத் தோன்றக் காரணம் சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய சர்க்கார் இப்படி சர்வேஸ்வரனிடத்தில் சகல பொறுப்புகளையும் ஒப்படைத்துவிடுகிறதே, சர்வேஸ்வரனுக்கோ வேலைகள் வேறு பல்பல உண்டே, எப்படி நம் உணவுப் பிரச்சினை தீரும் என்பதுதான்!

அமைச்சர் குமாரசாமியார் அழகாகக் கூறிவிட்டாரே கடவுளை நம்பினால் கஷ்டங்கள் தீரும் என்று, அப்படியானால் இதுவரை நம் கஷ்டங்கள் தீராததற்குக் காரணம் நாம் கடவுளை நம்பாதது என்றுதானே ஏற்படுகிறது—இது உண்மையா? நாட்டில் உள்ள எல்லா மக்களுமேவா கடவுளை நம்ப மறுக்கும் "கயவர்கள்" ஆகிவிட்டார்கள்? எல்லோருமேவா ஆண்டவனை அனுதினமும் வழிபட மறுத்துவிட்டார்கள்? எல்லோருக்குமா சூனாமானா ஞானாபிஷேகம் ஆகிவிட்டது? எல்லோருக்குமா? இல்லையே! காலையில் எழுந்ததும் "கசிந்து கண்ணீர் மல்கி காதலால் கரைந்து கரைந்து உருகி" கயிலைவாழ் ஈசனையோ ககனமயில் வாகனனையோ லக்ஷ்மி சமேதரையோ அரிபரந்தாமனையோ வழிபடத் தவறாத புண்யாத்மாக்கள்தானே ஏராளம் இந்நாட்டில்! தெருவுக்குத் தெரு இருபத்தெட்டு ஆலயங்கள் உள்ளனவே சென்னை ஒன்றில் மட்டும்! அத்தனை ஆலயங்களிலும் ஆறுகால பூஜை அனுதினமும்! அற்புதமாக நடந்த வண்ணம்தானே இருக்கிறது? போதாதகுறைக்கு, ஓமந்தூரார் இட்ட உத்தரவுப்படி, கோயிலுக்குக் கோயில் ஆண்டவன் கருணையைக் கோரி "மழையைப் பொழிய வைக்கும்"(!) யக்ஞங்கள் நடந்தவண்ணம் உள்ளனவே, ஆண்டவனிடம் வைக்கப்படும் நம்பிக்கை இவ்வளவு அதிகமாக இருந்தும் மழை பொழியவில்லை என்றால் அதற்கென்ன அர்த்தம்? ஆண்டவனுக்கு நம்மைப்பற்றி எண்ணிப் பார்க்க நேரமில்லை என்பதுதானே! அல்லாவிட்டால், "உம் பக்தியைக் கண்டு மயங்கிவிடும் பித்தனல்ல நான். புத்தி இருந்தால் உணவுப் பஞ்சத்தை விஞ்ஞானத்தின் சக்தியைக் கொண்டு போக்கிக் கொள்ளுங்கள்" என்பதாக அவர் கருதுகிறார் என்றுதானே அர்த்தம்! பிறகு ஏன் குமாரசாமியார் கடவுளை நம்புங்கள் கஷ்டங்கள் தீரும் என்று அர்த்தமற்ற உரையினை அவசர அவசரமாக அள்ளித் தெளிக்கிறார்! ஓமந்தூரார் மட்டுமல்ல அவரைப் போலவே தானும் பக்திமான்தான் என்பதை மக்கட்குத் தெரிவிப்பதற்கா? அல்லது "உணவுப் பஞ்சத்தைப் போக்க என்னால் முடியவில்லை — ஆண்டவனே மனம் வைத்தால் ஒழிய நம்மால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது" என்று கூறாமல் கூறி தன் திறமையின்மையைப் புலப்படுத்துவதற்கா? அல்ல எனில் வேறு எதற்காக இந்த வீணர்உரையை விவேகி என்று உரைக்கப்படும் இந்த வீரர் விளம்பவேண்டும்?

இரண்டு வாரங்கட்கு முன்னால் இந்த இராஜபாளையம் குமாரசாமியார் கனமாக ஆனதும் கூறினார், என்னுடைய ஆட்சிக் காலத்தில் ஒருவர்கூட பட்டினியாகக் கிடக்கும் படி விடமாட்டேன் என்று! நாம்கூட மகிழ்ச்சியடைந்தோம் இந்த நன்மொழியை இப் பெருமகனார் நாட்டுக்கு வழங்கிய அன்று! அப்போது நாம் எண்ணினோம் புதிய முதலமைச்சர் உணவைப் பெருக்குவதற்கான புது திட்டங்களைத் தீட்டுவார், கரம்பாகக் கிடக்கும் நிலங்களைக் கழனிக்காடுகளாக மாற்ற வழி தேடுவார், பயிரிடக்கூடிய ஆனால் பயிரிடப்படாமலே இருக்கின்ற ஏராளமான நிலங்களை உடனே உழுது பயிரிட்டு விளைபொருளை அறுத்துக் குவிப்பார், கூட்டுப் பண்ணை அமைப்பு—ரசாயன எருக்கள் நுழைப்பு—மெஷின் கலப்பையைக் கையாளுதல்—மின்சார சக்தியை உழவுக்குப் பயன்படுத்தல் போன்ற திட்டங்களை வகுத்து உற்பத்தியை அதிகமாக்குவார், இனிப் பயமில்லை பஞ்சம் தீர்ந்தது, பசிப்பிணி ஒழிந்தது என்று நினைத்தோம், மனம் களித்தோம். என் ஆட்சிக் காலத்தில் ஒருவரையும் பட்டினியாய் இருக்க விடமாட்டேன் என்பதற்கு "ஆண்டவனுக்குக் கருணை மனுப் போடுவேன்" என்பதுதான் பொருள் என்பது இப்போதுதான் நமக்குத் தெரியவருகிறது. அட ஆச்சரியமே! இவ்வளவுதானா சங்கதி! இதைத்தானா அவ்வளவு பெருமையாக ஆட்சிப் பீடம் ஏறியதும் அன்பர் குமாரசாமி ராஜா அன்றோர் நாள் முழக்கமிட்டார்!

கடவுள் கருணைபுரிந்தால் உண

(3-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
யின் மாண்பு? அரங்கநாதரின் கருணை? ஆண்டவனே, இது நியா காவிரிக் கரையில் இருந்து கதறி யமா? முறையா, தகுமா? என பழுத பக்தர்களின் யாரேனும் ஒருவராவது கேட்டிருக்கலாம் அரி பரந்தாமனை நோக்கி. ஆனால் கேட்கவில்லை! கேட்கத் தெரிய வில்லை! அது அவளின் கதி என்று சொல்லத்தான் தெரிந்தது அவர் களுக்கு!

ஒரு கிழவியை இழந்து மறு கிழ வியுடன் வீடு திரும்பினார் முதலி யார் அவர்கள்! இந் நிகழ்ச்சியில் இருந்து அரிபரந்தாமனிடம் அவருக் கிருந்த பக்தியெல்லாம் சிறிது சிறி தாகக் குறைய ஆரம்பித்தது. குறையாமல் எப்படி இருக்கும்? அவரது திருப்பாத கமலங்களை வழிபடச் சென்ற கிழவியை திருப் பாத கமலங்களிலேயே இரண் டறக் கலக்கும்படி செய்துவிட் டாரே அவர்!

* * *

முன்பெல்லாம் முதலியாருடன் தோட்டத்திற்குப் போக மறுத்து தலைவலி என்று பொய்யுரை புகன்று வந்த மனோகரி இப்பொ ழுது நாட்டம் கொள்ளுகின்றாள் தோட்டம் போக! முதலியாருக்கு ஒரே ஆனந்தமாகப் போய்விட்டது! முதலியாரும் குளித்து, குங்குமப் பொட்டிட்டு, பட்டாடை உடுத்து எகிப்து நாட்டு உயர்ந்த வாசனை யைத் தன் மேனிமேலே தூவி, தாம்பூலம் தரித்து தயாராக இருப் பார் சோலை செல்ல! "பூங்கா" என்றதும் பூம்பாவைக்கு ஓர் புத் துணர்ச்சி ஏற்படும். அங்குதானே இருக்கிறான் அம்மங்கைக்கு வரம் கொடுக்கும் வாலிபனை வேலன்! மகிழ்ச்சி பிறக்காதா மங்கைக்கு! தம்பதிகள் இருவர்களும் செல்வார் கள் பூங்காவிற்கு. காரிகை காளை யைக் காண்பாள்! கட்டுமஸ்தான தேகம், இளமையை எடுத்துக் காட்டும் புன்முறுவல் பூத்த முகம், சலியாத உழைப்பு, செடிகளைக் கவனிக்கும் தன்மை; இவை மனோ கராவின் மனதில் மகிழ்ச்சியைத் தூவும். ஆனால் வருத்தம் தோன் றும் வேலன் வசிக்கும் குடிசை யைப் பார்க்கும்போது! "இக் குடிசைபருகிலேயே இருப்பது தான் எனக்கு நன்றாயிருக்கிறது, இடகுதான் தென்றல் வீசுகிறது" என முதலியாரிடம் அடிக்கடி அறி விப்பாள். மாலை விரைவில் செல்லு வதைக் குறித்து மனம் ஏங்குவாள். பொறுத்தற்கரிய வருத்தத்துடன், கருத்திழந்து, விருப்பமின்றி, முதலி யாருடன் வீடு திரும்புவாள்.

சோலையிலே, காளையைக் கண்ட காரிகைக்கு, பஞ்சணையிலே முதலி யாருடன் துயில நெஞ்சம் வருமா? வேலனை நினைத்து நினைத்து வேதனை கொள்வாள். அன்று அவன் பார்த்த பார்வையிலே இருந்து ஓர் விதை தன் உள்ளத் திலே விழுந்து, முளைக்க நீர் இன் றித் தவித்துக் கொண்டிருப்பதை மனோகரி உணர்ந்தாள்.

ஒரு நாள் காலை! "மனோ! நான் மாணிக்கபுரம் சென்று அங்கு வாணிபம் செய்யும் வாசுதேவ செட்டியாரிடம், வட்டி கேட்டு விட்டு நாளை பகல் வருகின்றேன்" எனக்கூறி தம்புசாமியால் தயா ராக்கப்பட்ட இரட்டை மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டு முதலி யார் போய்விட்டார் பணம் தேட!

மங்கையின் அங்கம் எங்கும் ஒரே புத்துணர்ச்சி, முகத்திலே என்றுமில்லாத ஓர் பொலிவு. மாலையை வரவேற்றுக் கொண்டி ருந்தாள். மாலையும் வந்தது! சோலை யிலே இருக்கும் வேலனை ஒருமுறை தன் மனக்கண்ணுடி முன்பு கொண்டுவந்தாள். தன்னை நன் ருக அழகுபடுத்திக் கொண்டாள். மாலை மறைந்து மணி எட்டும் ஆயிற்று. சோலையுட் புகுந்தாள்.

"ஐயையோ! எனக்கு உதவி செய்வார் யாருமில்லையா? வலிக் கிறதே! அம்மா! ஆ! ஆ!!"

செடிகளுக்குத் தண்ணீர்விட்டுக் கொண்டிருந்த வேலன் சத்தத் தைக்கேட்டு திடுக்கிட்டு விரைந் தோடி வந்தான். "அம்மா! நீங் களா? இங்கு எப்படி வந்தீர்கள்? ஐயா எங்கே?"

"அவர் இன்று காலையில்தான் வேற்றூர் சென்றுவிட்டார். நான் மட்டும்தான் தனியாக இங்குவந் தேன். ஆ! அம்மா!! காலிலே ஓர் முள் தைத்து விட்டது! அதைக் கொஞ்சம் எடுத்து விடேன், வலிக் கிறதே வலியைப் பொறுக்க முடிய வில்லையே!!

"அம்மா! நான் தங்களை எப்படி ......தீண்டுவது! தாங்கள்......!"

"பரவாயில்லை வேலா! இந்த சமயத்தில் அதையெல்லாம் பார்ப் பதா? என்மேல் உனக்கு அன் பில்லையா? பிரியமில்லையா? கொஞ் சம் எடுத்து விடுவாயா?"

வேலன் மனதிலே ஓர் திக்பிரமை குடிகொண்டது. செய்வதறியாது திகைத்து நின்றான் அவன். "ஐயோ நான் காண்பது கனவா" என நினைத்தான். சுற்றிலும் ஒருமுறை பார்த்தான். ஆபத்துக்குப் பாவ மில்லையென அறிந்து மனோகரியின் பாதத்தை மெல்லப்பிடித்து முள்ளை எடுத்தான். "பளிச்" சென்று மின்சாரத் தாக்குதல் போன்று ஓர் உணர்ச்சி அவனைத் தாக்கிற்று. பலபல எண்ணங்கள்! பல்வேறு உணர்ச்சிகள்!

"ஐயோ! எனக்கு மயக்கம் வரு கின்றதே! என்னைச் சற்று நேரம் பிடித்துக்கொள்வாயா?" எனக் காரிகையாள் மொழிந்தாள். வேலன் ஏதோ உணர்ச்சியில் தாக் கப்பட்டான். மனோகரி பேய் பிடித்தவள் போல் ஆனாள். கட்டி ளங்காளையின் கரங்களிலே சாய்ந் தாள்.

"வேலா! எனக்கு சாதி வேண் டாம். சமயம் வேண்டாம். பணம் வேண்டாம். நகை வேண்டாம். நீயே எனக்கு வேண்டும், நீயே என் உயிர், உடல், ஆவியெல் லாம்! வரண்டுபோன பாலைவனத் தைப் பூஞ்சோலையாக்கின வேலா! நீதான் எனக்கு இன்பம்! நீதான் என் கணவன்!"

அவள் பேசினாள்! அவனும் பேசினான்—விழி எனும் மொழி யால்! பிறகு...இன்பம்...கொள்ளை! கொள்ளை!! கொள்ளை!

* * *

வேற்றூர் சென்ற முதலியார் வீடுதிரும்பினார். என்றுமில்லாத ஆனந்தத்துடன் அன்று காட்சி யளித்தாள், காரிகை. முகம் புத் தம் புதியதோர் களிப்பினையடைந் திருந்தது. அதனுடைய அர்த்தம் முதலியாருக்கு விளங்கவில்லை. மறு நாளும் அயலூருக்குப் போவ தாகப் போக்குக்காட்டி அவர் சோலையிலே மறைந்திருந்தார்!

மரக்கிளையொன்றில் இரண்டு சிட்டுக்கள் கொஞ்சிக் குலவியிருந் தன. குயில் தன் காதலனைத் தேடிக் கூவியது! அன்னம் தன் பேடையை அணைந்தது! ஒவ்வொரு சீவனும் காதலிலே துயிலும் அந்த வேளை!

ஆம்! வேலனும், மனோவும் கூடத்தான் சந்தித்தார்கள்! அன் பாகப் பேசி நின்றார்கள்! அல்ல! அகநானூற்றின் பொருளை ஆய்ந்து கண்டார்கள்! அவர்களது களங்க மற்ற அன்பு! ஆர்வம் பொங்கும்

[12-ம் பக்கம் பார்க்க]

கற்பனை, உண்மை இரண்டும் கலந்தது

கனவில் கண்ட காட்சிகள்

"ஜெயங்கொண்டான்"

கையெழுத்து மறையும் வேளை! கதிரவன், மேற்றிசை வானத்தில் பொன்னுருக்கு வெள்ளத்தில், மிதக்கும் நேரம்! தன்னைத் துரத்திக் கொண்டோடிவரும் கார் இருள் காதலியிடமிருந்து வேகமாக ஓடி மறையப் பார்க்கிறான் பகல் எனும் காளை! இந்தக் காதலர் விளையாட்டைக் கண்டு களித்தவண்ணம் வீதியின் வழியே எனது மாலை நேர "உலா"வைத் தொடங்கினேன் நான். தென்றலின் இன்பமும், சூழ்நிலையின் குளிர்ச்சியும், வழிநடைப் பாதையின் எளிமையும் என்னை வெகுதூரம் இழுத்துச் சென்றுவிட்டன. மாலை மறைந்து, பகலவன் ஓடி ஒளிந்து, இருட்பெருஞ் செல்வி எங்கணும் தன் அரசாட்சியை ஆரம்பித்து விட்டாள். அப்போதும் என் பயணம் நிற்கவில்லை, போய்க்கொண்டே இருந்தேன்.

சிறிது நேரத்தில், கரு முகிலை ஒதுக்கித் தள்ளியவண்ணம் வெண்ணிலா வானத்தில் மெதுவாக எட்டிப் பார்த்துப் புன்னகை சிந்தலாயிற்று. அந்தப் புன்னகையில் சொக்கிய யான், அந்த இன்பத்தை இழக்க விருப்பமின்றி, வெண்ணிலவுப் பெண்ணாள் சென்ற வழியெல்லாம் சென்றுகொண்டிருந்தேன். எவ்வளவு நேரம் அதுபோல என்னை மறந்தவனாய் எழில் நிலவு காட்டிய பாதைவழி சென்றுகொண்டிருந்தேனோ எனக்கே தெரியாது, திடீரென்று ஒரு முறை நான் வந்த வழியைத் திரும்பிப் பார்த்தேன். அந்த "வழி"யையே காணோம்! "வழி" இருந்த இடத்தில் வெறும் முள்ளும் புதரும், செறிந்து மிடைந்து துதைந்து நிற்கும் மரம் செடி கொடிகளுமே காணப்பட்டன. அதே நேரத்தில் அதுவரை எனக்கு வழிகாட்டும் வான்பொருளாக இருந்துவந்த நிலவின் ஒளியும் கொஞ்சம் கொஞ்சமாக மங்கிக்கொண்டே வந்து பிறகு முற்றிலும் அணைந்து விட்டது: நிலவு தன் முகத்தை முகில் கொண்டு மூடிக்கொண்டு விட்டது.

சில நட்சத்திரங்கள் மட்டும் மினுக் மினுக் என்று விட்டு விட்டு சுடர் வீசிக்கொண்டிருந்தன.

நட்சத்திரங்களின் சிறிய ஒளியைத் தவிர வேறு ஒளி ஏதும் இல்லை. எங்கும் ஒரே இருள்!

இதுவரையில் வானிடை மிதந்து வரும் தென்றல்போல அந்த இரவிலே இன்பமாக நடந்து வந்த எனக்கு, எங்கும் காரிருள் சூழ்ந்து கொண்ட இந் நிலையைக் கண்டதும், மிகுந்த அச்சம் ஏற்பட்டது. கைகால்கள் உதற ஆரம்பித்தன. உள்ளம் நடுங்கத் தொடங்கிவிட்டது. எப்படியாவது அந்த இடத்தைவிட்டுத் தப்பி ஓடவேண்டும் என்ற உணர்ச்சியே மற்ற எல்லா உணர்ச்சிகளை விடத் தலையோங்கி நின்றது. எப்படி ஓடலாம்—எங்கே வழி இருக்கிறது என்று சுற்றுமுற்றும் பார்த்தேன். அப்போது தொலைவில், ஒரு திசையில், மெல்லிய ஆவிவடிவான இரண்டு உருவங்கள், வானிலே மிதந்தவண்ணம், தலையை அசைத்து அசைத்து ஏதோ இரகசியம் பேசிக்கொண்டு செல்வதுபோல் தென்பட்டது. அந்த ஆவி வடிவங்களைக் கண்டதும் எனக்கிருந்த அச்சம் மறைந்து ஆச்சரியம் ஏற்பட்டது. அந்த உருவங்களைப் பின்தொடர்ந்து செல்லவேண்டும் என்ற தடுக்க முடியாத ஆவல் என்னைப் பிடர் பிடித்துத் தள்ளிற்று. சென்றேன். வேகமாகச் சென்றேன். அந்த இரு உருவங்களும் கடைசியாக நீண்ட மதிற்சுவர் ஒன்றைத் தாண்டி உள்ளே புகுந்தன. நானும் வேகமாக நடந்து அந்த மதிலருகே வந்து சேர்ந்தேன். நியாயமாக, அந்த இருள்சூழ்ந்த வேளையில், அந்தப் பயங்கரமான சூழ்நிலையில், தன்னந்தனியாக இருந்த எனக்கு, கட்டுக்கடங்காத பயம்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஏனோ தெரியவில்லை, அந் நேரத்தில் அன்று, என்றுமில்லாத துணிவும் வீரமும் ஏற்பட்டது எனக்கு. வேறு சமயமாக இருந்தால் கண்ணை மூடிக்கொண்டு தலை தெறிக்கும் வேகத்தில் அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டிருப்பேன். அன்று என்னவோ, மதில் அருகே சென்று, அங்கே இருந்த சிறிய பலகணி ஒன்றின் வழியாக உள்ளே சென்ற ஆவிகள் என்ன செய்கின்றன என்பதைப் பார்த்துத்தான் தீரவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. பலகணி வழியே உற்று நோக்கினேன். ஒரே நாற்றம்! என் உடலெல்லாம் வியர்வையாய்க் கொட்டிற்று. இருதயம் படபடவென அடித்துக் கொண்டது. இரத்த ஓட்டம் அடியோடு நின்று விட்டதைப் போலவும் கைகால்கள் சில்லென்று ஆய் விட்டதைப் போலவும் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. உள்ளே பிணவாடை வீசிக்கொண்டிருந்தது! அங்கே அநேக எலும்புக் கூடுகள் எலும்புந் தோலுமாகக் கிடந்தன, சிலவற்றில் தசை நார்கள் அழுகி வீழ்ந்து கொண்டிருந்தன. சிலவற்றிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. சில வெறும் எலும்புக் கூடுகளாகவே இருந்தன. அந்த எலும்பு உருவங்கள் அசைவதையும் பேசுவதையும் தலையை ஆட்டுவதையும் கைகளை ஓச்சுவதையும் காண்பதற்கு மிகவும் பயங்கரமாக இருந்தது. கறுத்துப் போன முகம்! வெள்ளைப் பற்கள்! மொட்டைத் தலை! சாம்பலை அள்ளி வீசிக்கொண்டும் புகையை எழுப்பிக்கொண்டும் இருக்கும் தோற்றம்! இத்தகைய உருவங்களைப் பார்க்கவும் என் கண்கள் கூசின. அவர்கள் பேச்சைச் செவி மடுக்கவோ என் காதுகள் மறுத்தன. நான் தேடிக்கொண்டிருந்ததெல்லாம் மதிலுக்கு வெளியே, என் கண்களைக் கவர்ந்து, என்னைத் தம் பின்னே வரும்படி செய்து, இந்த மதிலுக்குள் வந்து மறைந்துபோன ஆவி உருவங்களைத்தான்! மற்ற பல உருவங்களைப் பார்க்கவும் கூசிய நான் இந்த இரு உருவங்களைக் காண மாட்டேனா என்று துடியாய்த் துடித்தேன். கடைசியில் கண்டேன் அந்த ஆவி வடிவங்

களை! நான் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அந்த ஆவிகள் "தமிழ் வாழ்க" என்று கூவிய வண்ணம் வேகமாக நான் இருக்கும் பக்கமாக வந்தன. அவற்றிற்கு அந்த இருண்ட வீட்டு வாசம் புதிது என்பதும், நான் பார்த்துக் கொண்டிருக்கும்போது உள்ளே நுழைந்தனவே அதுதான் அவற்றின் முதல் பிரவேசம் என்பதும், அவற்றின் திகைப்பிலிருந்தும், மற்ற எலும்புக் கூடுகள்போல அவை அமைதியாக இருக்க முடியாமல் அலைவதிலிருந்தும் எனக்கு நன்றாகப் புலப்படலாயின. எனக்கோ திகில் ஒரு பக்கம், வியப்பு ஒரு பக்கம், உண்மையை உணர வேண்டும் என்ற ஆர்வம் ஒரு பக்கம், வருவது வரட்டும்—இந்தக் காட்சிகளின் கருத்தை அறிந்து கொள்ளாமல் திரும்புவதில்லை என்ற துணிவு ஒரு பக்கம். இந்த நால்வகை உணர்ச்சிகளும் என்னை ஒவ்வொரு பக்கம் இழுத்தன. நானோ எதன் பக்கமும் முழுதாகச் சாய்ந்துவிடவில்லை. எந்தப் பக்கத்தையும் அடியோடு விலக்கிவிடவும் இல்லை!

இரண்டு உருவங்களில் ஒன்று கட்டிளங் காளையின் வயதுடையதாக இருந்தது. மற்றொன்று மத்தியதர வயதினதாக இருந்தது. மூத்த உருவம் பேச ஆரம்பித்தது.

மூத்: தம்பி, நடராசா, என்மனமெல்லாம் வரவர உடைந்து கொண்டே வருகிறது. இரத்த ஓட்டமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வருகிறது. எலும்புக் கூடுகள் பல மற்று விழுவதை உணர்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் நாமும் இறந்துபோய், அதோ இருக்கிற கூடுகள்போல வெறும் கூடுகளாக ஆய்விடுவோம் போல் இருக்கிறதே!

நட: அண்ணா, தாலமுத்து, பயப்படாதீர்கள்! நீங்கள் செத்துப் போகமாட்டீர்கள்! நானே இன்னும் சாகவில்லையே!

தால: இல்லை தம்பி, எனக்கு என்னமோ பயமாகத்தான் இருக்கிறது, இதோ என் எலும்பு நொறுங்குகிறது.

நட: (சிரிப்புடன்) நாமா, சாவதா, ஒருபோதும் இல்லை அண்ணா! சாகமாட்டோம் நாம்! செத்துப்போக மாட்டோம்! மனித உலகைவிட்டு மாறப்போகிறோம்—அவ்வளவுதான்! நாம், தன்மானமிழந்த தமிழகத்தைத் தட்டி எழுப்பப் போகிறோம். சங்கம் எனும் தூய தொட்டிலில் வளர்ந்த தமிழ்ப் பிள்ளை இன்று வீண் வேதாந்தத்திற்கு இரையாகி, தனக்குத்தானே வளர்த்துக் கொண்டுள்ள மூடப் பழக்க வழக்கங்களை வெட்டி வீழ்த்தப் போகிறோம். உழைப்பவன் ஒருவன், உண்பவன் ஒருவன் என்ற ஆரியக்கருத்துக்குச்சரியான சாட்டையடி கொடுத்து அதை மண்ணில் சாய்க்கப் போகிறோம். இமயத்தின் எல்லை கண்ட முத்தமிழை, அத்தமிழின் சிறப்பை, நிலைநாட்டப் போகிறோம். வடநாட்டுவம்பர் மொழி நம் தமிழை வீழ்த்தவரும் விபரீதத்தை மண்டையில் அடித்து மாய்க்கப் போகிறோம், சாகப் போவதில்லை நாம்! நிச்சயமாக இல்லை!

தால: ஆம்! நாம் சாகப்போவதில்லை! அது சரி! ஆனால் நம் மரணத்தைக் கண்டு வீரத் தமிழகம் கண்ணீர் வடிக்குமே! மான் விழி மாதரும் ஏறனைய இளைஞரும் நெஞ்சு துடித்துத் துடித்து அழுவரே! என் அன்பு மனைவி அன்றைக்கே புரண்டு புரண்டு அழுதாளே! அன்புடன் என்னை நோக்கிடும் அவள் முகம், என் வாழ்க்கையையே தன் வாழ்க்கையாகக் கொண்டு மகிழும் அவள் மனம்... ஆ! இனி, என்ன பாடு படும்! ஐயோ! பாவம் பாவம்! அந்தக் காட்சியை நினைக்கும்போது என் உள்ளம் இரண்டாகப் பிளந்து விடும் போல் இருக்கிறதே.

நட: என் செய்வது! கதறட்டும்! கதறிக் கதறி அழட்டும்! அழுது அழுது சாகட்டும்! மண்ணோடு மண்ணாக அவர்கள் மடியட்டும். நசுக்கப்பட்ட தமிழர்கள், நம் மரணத்தைக் கண்டாவது மானவாழ்வு பெறட்டும். வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுச்சியுறச் செய்து நல்லரசமைக்கவேண்டும் என்ற உறுதியை நம் சாக்காடு அவர்களுக்கு அளிக்கட்டும். உயிர் எமக்கு வெல்லமல்ல ஆனால் உயர் தமிழ் எம் உயிர் என்று தமிழர் வீர முழக்கம் செய்யட்டும். ஆரிய மாயையை அடியோடு அகற்றட்டும். அப்படி, நம் மரணத்தைக் கண்டும், நம்மை நாமே பலிபீடத்தில் அர்ப்பணித்ததைக் கண்டும் அவர்களுக்கு தமிழ் உணர்ச்சி ஏற்படவில்லையேல், தன் மானங்கெட்ட பாதகர்களாக, வெறும் நடைப்பிணங்களாக, உணர்ச்சியற்ற சடலங்களாக அவர்கள் வாழ்வரேல், அப்படிப்பட்ட இழி நிலை தமிழகத்தில் ஏற்பட்டாலு கூட நட்டம் நமக்கு இல்லை! நா கடமையைச் செய்ய மறுத்தே மில்லை! உணர்ச்சியற்ற உருவங் ளாக அவர்கள் ஆகும் நிலை ஏ பட்டால் அப்போது அவர்க வாழவேண்டாம் செத்து மடியட டும்! சுடுகாட்டுச் சாம்பலாகட்டும் உயிரினும் இனிதான உணர்ச்சி யை இழந்த பிறகு, தமிழ்ப் பற்றை மறந்த பிறகு, வீரத் தமிழன் நான் என்ற தனிப் பெருமையை மறந்த பிறகு வாழ்வு ஏன்? அவர்களுக்கு நாடு ஏன்? மொழி ஏன்? மொழியில் இலக்கியங்கள் ஏன்? யாவும் அழியட்டும்!

தால: ஆம்! ஆம்! அழிய வேண்டுவனவே அவை! தமிழ்ப் பற்று இருந்தால்தான், தமிழன் என்னும் உணர்ச்சி இருந்தால் தான், தமிழ் நாடு என் நாடு என்ற உரிமை வேட்கை இருந்தால்தான் தமிழன், தமிழன்! இல்லையேல் அவன் பிணம், பிணம்! பிணம் ஏன் வாழவேண்டும்? ஒழியத்தான் வேண்டும்! முதலில் நான் நினைத்தேன், தமிழர், தம் மானத்தை இழந்துபோனால் இழந்த மானத்தை பிறகோர் நாள் மீட்கவாவது வாழ்வு வேண்டாமா? அவர்கள் உடலில் ஓடக்கூடிய வெறும் தண்ணீரை உண்மைச் செந்நீராக மாற்றிக்கொள்ள உயிர் வேண்டாமா? என்றெல்லாம் நினைத்தேன்.

ஏஜெண்டுகள் தேவை!

கீழ்க்கண்ட இடங்களில் போர்வாள் விற்பனை செய்ய பிரதிக்கு அணா 12 முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை.

மேட்டூர், வெளிப்பாளையம், போளூர், அறந்தாங்கி, பண்ருட்டி, வாடிப்பட்டி, இஞ்சிகுடி, ஜோலார் பேட்டை, திருவள்ளூர், திருவத்திபுரம், சிவகங்கை, பட்டுக் கோட்டை, வந்தவாசி, தஞ்சாவூர், திருக்காட்டுப்பள்ளி, துறையூர், புவனகிரி, கொழும்பு, சென்னிமலை.

வேண்டாம்! மனித சமுதாயத்தில் உணர்ச்சியை இழந்து, மானத்தை இழந்து, நாட்டுப் பற்றை இழந்து வாழும் மனிதப் புழுக்களுக்கு ஏன் இவை? தேவையில்லை.

[சிரிக்கிருன். இருவரும் சிரிக்கின்றனர்.]

ஒரே பேய்ச்சிரிப்பு! நாட்டு மக்களை மட்டந்தட்டி நாட்டாண்மைக் காரர்களாக உலவும் மேதாவி களுக்குச் சவுக்கடி கொடுக்கும் சிரிப்பு! அவர்கள் இருவர்தம் உயிரையும் குடித்த ஊராள்வோரின் உலுத்தத்தனத்தைக் கண்டு எள்ளிநகையாடும் சிரிப்பு! பண்டைப் பெருந்தமிழுடன் மோத வந்த இந்திச் சிறுமொழியைப் பார்த்து முழங்கும் பெருஞ் சிரிப்பு! சிரிப்புக்குப் பிறகு அமைதி! அந்த அமைதியின் இடையே......தூரத்தில்.. தொலைதூரத்தில்...எங்கோ ஓரிடத்தில், "தாலமுத்துகளே, நடராசன்களே! தமிழகத்தின் வருங் காலச் சிற்பிகளே" என்ற குரல், கம்பீரமான தொனியில் கேட்டது. வார்த்தைகள் தெளிவாகவும் அழகாகவும் இசையொலி முழக்கம் போலவும் வந்து விழுந்தன...ஆம்! தளபதி பேசுகிருர்!......பக்கத்தே, வெண்தாடி வேந்தரின் உருவம்! சிங்க ஏறுபோன்ற தோற்றம்! ஒளி வீசும் கண்கள்! வெண்ணிறத்தாடி! மொத்தமான குறுந்தடி! அவர் தலைமை வகிக்கிருர்!

நாவ: நடராசா, அதோ பார் அந்தப் பைத்தியக்காரக் கிழவனை! தன் பட்டம் பதவிகளைத் துறந்து, சொத்து சுகங்களை இழந்து, ஜமீன்தார்போல் வாழ்ந்த ஆடம்பர வாழ்வை உதறி எறிந்து, ஏழை எளியார் போல அலைந்து திரிந்து நாட்டு மக்கட்காக அல்லும் பகலும் பாடுபடும் அந்த மாவீரனைப் பார்! சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து, சூது மொழிகளை வீசிவந்த வேஷக்காரரின் வேத மொழிகள் வெறும் புரட்டு என்பதை எடுத்துக்காட்டி, புராண இதிகாசங்களின் பொய்ம்மையையும் தலைவிதி தத்துவத்தின் கொடுமையையும் விளக்கிக் காட்டும் அந்த அஞ்சாத நெஞ்சனைப் பார்! பார் திராவிடத் தந்தையை, தமிழர் தலைவரை, தென்னாட்டைத் திருத்த வந்த தீரரை, வைக்கம் வீரரை!

நட: அப்படி யெல்லாம் செய்தும் அதோ பார் அண்ணு, அவர் மீது வீசப்படும் கல்லடியை! சொல்லடியை! சொந்த மக்களின் ஏசல் வாசகங்களை! அந்தக் கிழவன் இந்த அறிவுகெட்ட சமுதாயம் எக்கேடாவது கெட்டுத் தொலையட்டும் என்று இருந்துவிட்டாலென்ன?

நாவ: அதுபோல எப்படி யப்பா இருக்கமுடியும் அந்த மாவீரரால்! தமிழகத்தில் புரட்சிப் புயல் எழுப்புவதற்காகவே தோன்றிய தீரர் சும்மா இருப்பது என்றால் அது என்ன நடக்கக் கூடிய காரியமா! ஆமாம் நடராசா, அதோ நம் அருமைத் தளபதி ஏற்றிவைக்கிறரே கொடி, அது என்ன புது வகையினதாக இருக்கிறதே! முன்பு, நாம் இருந்தபோது இருந்த கொடி இதல்லவே!

நட: இல்லை! இது புரட்சிக் கொடி! இன இழிவை ஒழிக்கும் கொடி! தமிழகத்தில் தமிழர் இழிவாக உள்ளனரே, அவர்கள் வாழ்க்கை இருண்டு கிடக்கிறதே, அந்த இருளை எடுத்துக் காட்டுவதுதான் கொடி முழுவதும் உள்ள கறுப்பு! அந்த இழிவை ஒழிக்க எங்கு உள்ளம் படைத்த இளந் தமிழ்க் காளைகள் சிந்தனை என்னும் போர்வாளைக் கையிலேந்தி, திருக்குறளைக் கேடயமாகத் தாங்கி, நாட்டை மீட்கவும் இழிவைத் துடைக்கவும் போர் பல புரிய புரட்சி முழக்கம் புரிகின்றனரே அந்தப் புரட்சியின் நிறம்தான், கொடியின் நடுவே உள்ள சிகப்பு! அது சரி அண்ணு, அதோ பெரியாரின் அடிச்சுவட்டைப் பின்தொடர்ந்து வந்து முழங்குகிருரே சிங்கமென, யார் அந்த இளைஞரேறு?

நாவ: காது கேட்கவில்லையா நடராசா? நீ கவனிக்கவில்லையா? வேலாயுதம் பேசுவார் என்று முன்பு குறிப்பிட்டிருந்தார்களே, நினைவில்லையா?

நட: அவரா அண்ணு அது! கொஞ்சம் இருங்கள். என்ன பேசுகிருர், கேட்போம்!

[கூர்ந்து கவனிக்கின்றனர். எங்கோ, தொலைவிலிருந்து, கணீர் கணீர் என்று பேசப்படும் குரல் ஒலி கேட்கிறது.]

"தமிழ் மொழி தரணியில் சிறந்த மொழி. இதன் உயர்வைக் கெடுக்கும் உலுத்தன் யாராயினும் அவனைச் சும்மா விடமாட்டார்கள் சிங்கத் தமிழர்கள். தமிழின் வளத்தையும், தமிழர் வாழ்வையும், தமிழ்மேன்மையையும் சிதைக்க எண்ணும் சிறுமதியாளர்களை ஒழித்துக்கட்டாமல் ஒருநாளும் ஓய்ந்திருக்க மாட்டோம் உண்மைத் தமிழ் இளைஞர்களாகிய நாம்! இந் நாட்டில் டாடா டால்மியா பிர்லாக்கள் என்று பல்வேறு இனத்தவர் சுரண்டுவதை இனியும் அனுமதித்துக் கொண்டிருத்தல் முடியாது! தங்கத்தின் கோட்டையான தமிழகம் இன்று தரித்திரத்தின் கோட்டையாகக் காட்சி தருகிறது. வந்தேறிய அன்னியர்க்கெல்லாம் தண்டச்சோறு போட்ட தமிழகம், இன்று தனக்கே உண்ண உணவின்றி உடல் இளைத்துக் கிடக்கிறது! இந்த நாட்டின் சொந்தக்காரர்கள் சொந்த நாட்டில் சோறு இன்றி வதைய, தகரக் குவளையை எடுத்துக் கொண்டு இந்திரா தந்திரா என்று பஜனைபாடிக்கொண்டே வந்த இனம் இன்று உப்பரிகைகளிலும் ஊராளும் மன்றங்களிலும் உயர்ந்தவர் என்று சொல்லி உல்லாச வாழ்வு வாழ்கிறது! இதை இனியுமா பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? இல்லை! முடியாது! இதைப் பொறுக்க முடியாது! இனி ஒரு கணமும் இந்த இழி நிலை நீடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு நாம் சும்மா இருப்பதென்பது முடியாத காரியம்!"

நட: பார்த்தீர்களா அண்ணு சேரன் செங்குட்டுவன் என அந்த வீரத் தமிழன் முழங்குவதை!

நாவ: அந்த இளம் புலவன் பேச்சு இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமாக அல்லவா இருக்கிறது!

நட: சொல்லுக்குச் சொல் வீரம் ததும்புகிறது!

நாவ: எழுத்துக்கு எழுத்து தமிழ்க்கனல் அனல் வீசுகிறது!

நட: வீரன் பேசும்போது தமிழ் துள்ளி விளையாடுகிற புதுமையைக் கண்டீர்களா அண்ணு?

நாவ: தமிழ் துள்ளி விளையாடுகிற புதுமையை மட்டுமா, தன்மான இயக்க வேகம் பொங்கித் ததும்பும் அழகையும் கண்டேனே!

[இருவரும் களிப்பினால் கூவுகின்றனர், ஆனால் அதே நேரத்தில் தொலைவில் கூட்டம் நடக்கும் இடத்தில் திடீரென இடி இடிக்கிறது. மின்னல் மின்னுகிறது. புயலும் மழையும் கலந்து அடிக்கிறது. ஒரே குழப்பம். அடர்ந்த இருள்! சில விநாடிகள் ஒன்றும் புலப்படவில்லை, பிறகு......]

நட: என்ன அண்ணு, ஒன்றுமே தெரியவில்லை..! ஆ! அய்யோ! அய்யோ! வேலாயுதம் ...அதோ... அந்த மூலையில்...பாவி

கள் அடிக்கிறார்களே ... ஐயோ ... வேலாயுதத்தின் மேனி இரத்தக் கறை படிந்ததாக ஆகிவிட்டதே... குருதி சிந்துகிறதே ... இரத்தம் வெள்ளம்போல் ஓடுகிறதே... அந்தோ... அந்தோ......

தால: ஆ! அய்யய்யோ! வேலாயுதம் துடிக்கிறாரே! மாபாவிகள் சித்திரவதை செய்கிறார்களே...... ஐயகோ.. ...

நட: அண்ணா, வேலர் துடிக்கிறாரே! அதோ தூக்கிக்கொண்டு போகிறார்களே! கீழேயும் போட்டு இழுக்கிறார்களே! அவர் துணியை எடுத்து கழுத்தில் கட்டி மரத்தில் மாட்டிவிட்டுச் செல்கின்றனரே அந்த சோற்றுத் துருத்திகள்! அய்யய்யோ வேலர் போய்விட்டாரே! வாழவைக்க வேண்டும் சமுதாயத்தை என்று துடிதுடித்துப் பணியாற்றிவந்த வேலாயுதம் மரத்திலே மாட்டிவிடப்பட்டு விட்டாரே! தன்மானம் என்பதையே அறியாத சில விபீஷண உருவங்கள் மாவீரனை மாய்த்துவிட்டனவே நயவஞ்சகத்தனமாக!

தால: பிணம் என்ன ஆனது, நடராசா, ஆட்கொல்லிகள் என்ன ஆனார்கள்?

நட: இந்த சூழ்ச்சிக்கார உலகைப்பற்றி நாம் என்ன சொல்ல முடியும்? முடிவு என்ன ஆகிறதோ பொறுத்திருந்து பார்ப்போம்.

தால: அதோ பார் நடராசா, வேலர் மறைந்த இடத்திலே வீரத் தமிழர்கள் ஒரு கட்டிடம் கட்டத் தொடங்குகிறார்கள்...அதோ கட்டிடம் கட்டப்படுகிறது...அதோ கட்டி முடித்துவிட்டார்கள்......"வேலாயுதம் இல்லம்" என்று போர்டும், பக்கத்திலே வேலாயுதபுரம் என்ற போர்டும் தொங்கவிடப் படுகிறது...

நட: தமிழர், தம் சமுதாயத்தை வாழவைப்பதற்காகத் தம்வாழ்வை அர்ப்பணித்த மாவீரர்களைப் போற்றத் தொடங்கிவிட்டார்கள்! இனி, தமிழர்கள் வாழ்வார்கள்! இனி, புதிய தமிழகம் உருவாகும்! இனி, இன்பத் திராவிடம் அமைவது நிச்சயம்!

தால: இதோ வேலாயுதம் நம்மை நோக்கி வருகிறார், நடராசா! இதோ, கீழ்த்திசையில் பார்!

[வேலாயுதம் வருகிறார். இருவரும் வரவேற்கின்றனர்]

வேலா: செந்தமிழின் உயர்வை நிலைநாட்டுவதற்காகச் சிறைவாசம் ஏற்று, வீரவாழ்வு வாழ்ந்து, பிறகு உயிரையும் தமிழுக்கு அளித்த உத்தமர்களே, வணக்கம்.

தால, நட: தமிழகம் சுரண்டப்படுவதை, தமிழர்கள் இழிமக்களாக்கப்படுவதை, தமிழ்மொழி தாழ்த்தப்படுவதை ஒழிப்பதற்காக அல்லும் பகலும் அரும்பணியாற்றிய இளந்தமிழ்ப் புலவரே, வணக்கம். பாவிகள் உம்மை மிகவும் வருத்திவிட்டனரே, உம் உடல் மிக நொந்திருக்குமே, குருதி கொட்டிற்றே ஆறென, அதைக்கண்டபோது எங்கள் கண்கள் குளமாயினவே, நண்பரே, மிக வருந்தினீரோ?

வேலா: வருந்துவதா? ஏன் வருந்தவேண்டும்! என் உடலைத் தானே சிதைத்துச் சித்திரவதை செய்தனர் சித்தத்தில் பித்தேறிய அச் சூதர்கள்! ஆனால் என் உள்ளம்! அதை யார் என்ன செய்ய முடியும்?

நட, தால: இரும், புலவரேறே! அதோ, சென்னையில், பெரியார் தலைமையில் தளபதி பேசுகிறார், கேளும்.

[சென்னை ஜலந்து மைதானம். வெள்ளம்போல் தமிழர் கூட்டம். மக்கட் கடலிடையே, தலைவர், கம்பீரமாக வீற்றிருக்கிறார். அந்த 'அறிவின் எல்லை'க்கு அருகே நின்று தளபதி, பேசுகிறார். 'பேசுகிறாரா, இல்லை! இடிமுழக்கம் புரிகிறார்.]

"நாங்கள் — நாங்கள் என்றால் பெரியார் பெரும்படையைச் சேர்ந்தவர்கள், இனி இறக்கும்போதும், ஆளவந்தார்களின் தடி எங்கள் உடலை அடித்துத் துவட்டும்போதும், அப்படி அடிபட்டு நாங்கள் சுருண்டு கீழே விழுகின்றபோதும், அடிபட்டு எலும்பு முறிந்து இரத்தம் ஒழுகுகின்ற ஒரு கரத்தைத் துடைக்க எழும் மறுகரத்தின்மீது மற்றொரு பலமான அடி விழுகின்றபோதும், ஐயோ அம்மா என்று கூவமாட்டோம்! தாலமுத்தே நடராசா வேலாயுதா என்றுதான் கூறுவோம். அடி எங்கள் உடலமீது விழவிழ, தாலமுத்தும் நடராசனும் வேலாயுதமும் செய்த தியா

(3-ம் பக்கம் பார்க்க)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காதல் பேச்சு! உண்மைக் காதலின் பண்பு! இவ்வளவையும் நேரில் கண்ட முதலியார் உணர்வை யிழந்தார். தள்ளாடித் தள்ளாடி வீடு அடைந்தார். அன்று அவர் பார்த்த காட்சி வேதனையாக மாறி அவரைப் படுக்கவைத்தது! இரண்டே நாட்களில் முதலியார் மரணபுரிக்கு வெகு அருகே வந்துவிட்டார்.

மூன்றும் நாள்! மரணப் படுக்கையில் இருக்கிறார் முதலியார்! இனியும் தாமதிக்க லாகாதென மனோகரியையும் வேலனையும் பக்கத்தில் அழைத்தார். மனம் விட்டுப் பேசினார். "மூன்று நாட்களுக்கு முன்னால் தோப்பில் உங்கள் இருவரையும் கண்டேன். முதலில் கோபம் வரத்தான் செய்தது. தொட்டுத் தாலி கட்டிய புருஷன் நான் இருக்க தோட்டக்காரனிடம் கொஞ்சுவதா நம் மனோகரி என்று கொதிக்கத்தான் செய்தது என் உள்ளம்! ஆனால் கோபம் சில விநாடிகளில் பரிதாபமாக மாறியது. ஆண்டு அறுபது ஆன என்னிடம், அரும்பும் முல்லை போன்ற மனோகரா எப்படி விருப்பம் கொள்ளமுடியும் என்பதை எண்ணிப் பார்த்தேன் உடனே கோபம் தணிந்தது. மனோ! அன்றே தீர்மானித்துவிட்டேன் நான் உன்னை வேலனுக்கு உடனே திருமணம் செய்துவிட வேண்டும் என்று! ஆனால் மரணம் அந்தப் பணியை முடிப்பதற்குள் என்னை அழைக்கிறது. நான் போகிறேன் — நீங்கள் நலமாக வழுங்கள். என் சொத்தையெல்லாம்கூட நேற்றே உங்கள் பெயருக்கு எழுதி வைத்துவிட்டேன். வேலா, மனோகரி, இருவரும் இனி இன்பமாக இருங்கள். நான் ... இனி ... உயிரோடு...இருக்க...மாட்...டேன்...

முதலியார் பேச்சை முடிக்கக்கூட இல்லை. அதற்குள் காலம் அவர் வாழ்க்கைக்கு முடிவுரை கூறிவிட்டது...இயற்கை எய்தினார் முதலியார். உயிர் பிரிந்துவிட்டது. உடல்தான் இருந்தது. ஆனால் அதன் முகத்திலே புன்னகை, சாந்தி, திருப்தி, அமைதி யாவும் நிழலாடியவண்ணம் இருந்தன. அதே நேரத்தில் காதலர் இருவர் கன்னங்களிலும் கண்ணீர் வழிந்தோடியது. ——